# வெற்றியை நோக்கி...

'வெற்றி நிச்சயம்! இது வேத சத்தியம்!' என்ற இலட்சியத்தோடு வெற்றிப் பாதையை நோக்கிப் பீடுநடை போடும் மனிதர்களுக்குத் தன்முனைப்பு அவசியமாகும். ஒருவன் எத்துறையில் வெற்றி பெற நினைத்தாலும் அவனுக்கு என்றும் துணையாக நிற்பது தன்முனைப்பே. வெற்றி என்னும் சிகரத்தை அடைவதற்குத் தன்முனைப்பு என்னும் ஏணியில் ஏறித்தான் ஆக வேண்டும். ஒருவன் தன்முனைப்பை எந்தெந்த வழிகளில் பெறலாம் என்பதைச் சற்று ஆராய்வோம்.

ஒருவன் தன்முனைப்பினைத் தனது மனத்தில் பெற்றிருத்தல் மிக அவசியம். தன் மனம்போன போக்கெல்லாம் போகாமல் தனது ஆசைகளை ஒரு கட்டுக்குள் அடக்கி, மனத்தைச் சீர்செய்து, அதனை நல்வழிப்படுத்திச் செயலாற்ற வேண்டும். அவ்வாறு, மனம் நல்வழியில் செல்ல வேண்டுமானால் நமது உள்ளத்திற்கு ஊக்கமூட்டும் வார்த்தைகளை அவ்வப்போது மருந்தாக இட வேண்டும்.

'ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு' என்பதை நாம் அறிவோம். ஆக்கத்திற்கு அழகு தரும் ஊக்கத்தைப் பெற்றோர் தங்களது பிள்ளைகளுக்கு அளித்தல் வேண்டும். இதுவே, பிள்ளைகளுக்கு ஒருவிதத் தன்முனைப்பாக அமையும். பிள்ளைகள் தேர்வுகளில் குறைந்த மதிப்பெண்கள் பெறும்போது அவர்களை அதட்டி, மிரட்டி வைக்காமல் அவர்களது குறைகளை என்னவென்றறிந்து, அவற்றைக் களைந்தெறிய ஆவன செய்து, தக்க வகையில் ஊக்கமூட்டும் வார்த்தைகளைக் கூறிப் பிள்ளைகளின் மனத்திற்கு ஒருவிதத் தனமுனைப்பை அளித்தல் பெற்றோரின் தலையாயப் பணியாகும்.

'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்பதை நாம் உணர்வோம். எழுத்தறிவிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தன்முனைப்பையும் அளித்தல் அவசியமாகும். ஒரு மாணவன் தனது பள்ளியைச் சார்ந்த போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி வாகை சூடினாலும் சரி; தோல்வியோடு திரும்பினாலும் சரி, அவனுக்கு ஊக்கமூட்டும் வார்த்தைகளைப் பரிசாக அளித்து, அவனை வகுப்பின் முன் பாராட்ட வேண்டியது ஆசிரியரின் பணி. அதோடு ஒரு மாணவனுக்குப் பாடங்களில் ஏற்படும் ஐயங்களைக் களைந்து அவன் கல்வியில் இன்னும் மேம்பட வழிகள் கூறி, ஊக்கமளிப்பதுவும் ஆசிரியரது கடமையாகும். ஆசிரியர்களின் இப்போக்குகள் மாணவர்களுக்குத் தன்முனைப்பினை உண்டுபண்ணும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மேலும், வெற்றியடைய நினைப்போர் நண்பர்களின் உதவியையும் நாடலாம். அதுவும் நற்பண்புகள் கொண்ட நண்பர்களோடு சேர்ந்து, கல்வி, விளையாட்டு ஆகியவற்றில் தனக்குத் தெரிந்தவற்றைப் பகிர்ந்துகொள்ள கொண்டும், தெரியாதவற்றை அவர்களிடமிருந்து அறிந்துகொண்டு நட்புறவு வைத்துக்கொள்வது நல்லது. இக்காலத்தில், அதிக நேரத்தைத் தங்களது நண்பர்களோடு செலவிடுவதும் சில சமயங்களில் ஒரு தன் முனைப்பாகவே அமையும்.

ஒருவன் இத்தகைய தன்முனைப்பினைத் தனது ஆசிரியர்களிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் தோழர்களிடமிருந்தும் பெற்றானானால் அவனது மனம் தெளிவு பெற்றுச் சீரடையும். இத்தகைய நிலையில்தான் ஒருவனது மனச்சாட்சி அவனுக்குத் தன்முனைப்பினை அளிக்க இயலும்.

**'முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்'**

என்பதற்கேற்ப, அவனது மனம் அவனை முயற்சி செய்யத் தூண்டிவிடும். 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பதற்கேற்ப முயற்சி என்னும் படியில் ஒருவன் காலடி எடுத்து வைத்தால் வெற்றி நிச்சயம்தானே?

மேலும், ஒருவன் தன்முனைப்புப் பெறச் சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கம் போன்ற அமைப்புகள் நடத்தும் தன்முனைப்புக் கருத்தரங்குகளுக்குச் சென்று மனத்தை வளப்படுத்தலாம். அதோடு, ''உன்னால் முடியும் தம்பி, தம்பி! இந்த உலகம் இனி உன்னை நம்பி'' போன்ற ஊக்கமூட்டும் பாடல்களைச் செவிமடுத்தால் ஒருவனது தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

ஆக, தன்முனைப்பு என்னும் ஏணியின் படிகளாக விளங்கும் ஊக்கமும் தன்னம்பிக்கையும் முயற்சியும் ஒருவனிடமிருந்தால் அவன் வெற்றி என்னும் சிகரத்தினைத் தொட்டுவிடலாம். தன்முனைப்பே வெற்றிக்கு வழி. இவ்வுண்மையை நம்மால் மறுக்க இயலுமா!

**வெங்கடாசலம் அலமு,**
**உயர்நிலை 4 உயர் தமிழ்**